ஸ்ரீ

S. G. கிட்டப்பா

K. S. செல்லப்பா S. R. கமலம்

F. [illegible]. சுந்தராம்பாள் இவர்கள் பாடிவரும்

தசாவதார

பஜனைப்பாட்டுகள்.

சென்னை: திருவொற்றியூர்

நாகை. சரவண முதலியார் அவர்களது

கலைமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது

1929

ஸ்ரீ

விநாயகர் துதி வெண்பா.

முக்கண்ணன் முன்னுதித்த முருகன் னரிமருகன்
திக்கவர்கள் போற்றுந் தேசிகனே—யிக்கணம் யான்
செந்தமிழாற் செப்பிச் சேவித்து நன்மைபெற
தந்திமுக வன்றுன் சரண்.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

எஸ். ஜி. கிட்டப்பா பாடிவரும்.

ஸ்ரீராமர் பல்லவி.

தசரதராஜ குமாரா சுகுமாரா
அலங் காரா அதி தீரா தச

அநுபல்லவி.

1 இசைபெருகியரகு வம்ஸசிலாக்கியம்
எழில்பிதுர் வாக்யப்பரி பாலனயோக்கியம்
வனத்துறவடைந்ததனுல் வரும்பெரும் பாக்கியம்
மனதில் நீ உணர்தம்பி பாதா சுகமுனிதா தச

பரதர் பல்லவி.

கௌசலை மகிழும் விநோதா குணநீதா
ரகு நாதா என்மேல் வாதா கௌ

2 தாய்செய்த வினையினுல் தவிழநொந்தேனே
தாரணியிலெழுந்தர்ம மாயடைந்தேனே
நேயமோடுவும் தடி பணிந்தேனே
நிச்சயமிதுததிவாரும் அருள் தாரும்
ஆசையைத் தீரும் யெனைக் காரும் கௌ

ஸ்ரீ ராமர்.

3 வருடமீரேழு வனத்தினில் கழித்தே
வருவேனயோத்தி வளர் நகடுத்தே
அருமைபெருமையுள தன்பினை நினைத்தே
அதிதுரிதமுடனேவருவேன் அருள்புரிவேன்
ஆசை தருவேன் தவரிடேன் தச
பரதர்.

4 உமது தெரிசன மென்றுகாண்பேனே
உத்தமாவுமைப்பிரிந்து துயர்தரிப்பேனே
அமைபுமயோத்யமா நகரடைவேனே
ஐயோ சகியேனென தன்னு மணி வண்ணு
மலர்க் கண்ணு கமல வண்ணு கௌ

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

கெ. எஸ். செல்லப்பா பாடிவரும்

செந்தமிழை யுலகினில் தந்திட்ட-என்றவர்ணமெட்டு

கண்ணிகள்.

1. கடம்பக்கந்தன் சேர்வைமருத்துவம்
கண்டேன் மெய்க் கலியுகவரதன்
கல்யாணத்திருப்பரங்குன்றம் சற்குருமணி முருகன்
கல்யாணத்திருப்பரங்குன்றம் ஜீவ
காருண்யக்கடவு ளாருண்யக்குறவர்
நேர்புண்யக்கிளவர் போல்நடிக்குளரி
கை கால் மெய் நடுக்குடன் நின்றார் தினைமாவுறும்வள்ளி
காட்டானை பயத்தில் மணங்கொண்டாள்
2. டடட்டடண்டென பபப்பபம்பென
சங்கோசை ஜெயகண்டி வாத்தியம்
தண்டாயுதப்பண்டாரமே கங்காளசித்தர்
சத்ஜானந்தத்தின் சாரனே பஞ்
சாக்ஷரத்தகமை மோக்ஷ வீக்ஷ
சடாக்ஷரப்பெருமை காக்ஷிகானருமை
தன்பாரம்பரப்பதந்தந்தான் மெஞ்ஞான ரத்னம்
தன்பாடல் திருப்புகழ் சிந்தாம்.
3. அலகிர்த ஜம்பம் காவடி இன்பம்
அமர் தப்ர வாகம் பொங்கி

அழியாத பேரின்பமே தொண்டேரியர்க்கு
திடங்காக்ஷி யாரின்பமே வெண்
திருநீரமிர்தம் தருங்குகன் சுகிர்தம்
திருமங்கலமா மயன்மிசை நடமிடும்
ஆச்சாரப்பூஜை ருத்வமே பகதூர் மாம்பழ
வேல்சாமி பாடிய ரத்னமே கடம்ப

இராகம்-நாட்டைக்குறிஞ்சி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏழைமே லின்னும் வர்ம்மமா சாமி ஏழை
ஈதருமையாய்க்கோரினேன் சாமி ஏழை

அநுபல்லவி.

ஆழமாங்கடல் சூழும் பூமியில்
ஆசைவிட்டு வுன் னருள்பெற வில்லையே ஏழை

சரணங்கள்.

நீ நினையலது பாரமல்ல வெகு நேரமுடனே திர்கதறினேனே
நானுனைவிட மாட்டேன் சாமியே
ஐயாஞனுய்ய பென்னையா யித்தருணம் ஏழை
பாதகத்தை நின்றாலும் பாதம் பணிந்திடும் பரிவுடையே
சாதனைப்பசந்தோ நினைத்த
சந்தானக்கிருஷ்ணனின் தமிழ்க்கருள் மலையே ஏழை

மஹமதியர் மதத்தில் மாணிக்கமாய் என்ற மெட்டு

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. செந்தமிழ் உலகினி தந்திட்டகந்தனேவுன்
செந்தாமறைப் பொற்பாதமே துதிக்குமென்மேல்
வந்தேன் பிடிவாதமே
திருவருள் புரிந்திடு மருதிருமருகனே
கருணைக்கடலே வரும் பெருமனத்துயர்தனை
தீர்க்கவேறாருன் டெனக்கு ஏழை மென் மீதென்
சித்தமிரங்கா துனக்கு செந்
2. பாவியசுரர்களை மேவித்தரித்து தேவர்
ஆவிபைக்காக்க வில்லையா குறவள்ளியை
தேவியாய்ச் சேர்க்க வில்லையா
பகலிரை யிதைவிட அகமதிலுனை நின்
இகமும்பரசா தகமுந்தருவாய்

பத்தருரைத்ததும் பொய்யா முந்தியான்செய்த
பாவங்குறிக்கிடா தையா
3. தந்தைக்குபதேசித்த மந்திரத்தை எனக்கு
தந்திடாதென்ன வஞ்சமோ பிள்ளைக்குத்தா
உந்தனுக்கிது பஞ்சமோ
தத்தளிசித்தளி நித்தம் நினைக்கிடும்
பித்தனையுத்தம னாக்கிடப்பெற்றவன்
சற்றுமன்னிக்கக் கூடாதோ நீமறந்தாலும்
தந்தையைப்பிள்ளை தேடாதோ செந்
4. திங்கள் தரித்தசிவ சங்கரன்பாரிதந்த
தங்கவேல் தாங்கி நின்றவா சூரர்க்கருவை
எங்குமில்லாமல் வென்றவா
சங்கடந் தீர்த்திட சாயுச்சியமீந்திட
அங்கம்பூரித்திட அருளதைபுரிந்திட
சத்தமிசைந்துப் பாடினேன் தினம்பணிந்து
கத்தாவுன்னைக்கொண்டாடினேன் செந்

—[○]—

வருவினை நீக்கி சிருவினைக்காக்க என்ற வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி

பல்லவி.

துலங்குசெம்பொன் கோபுரமேவிய த்வாதாசங்கமதுரை
சொக்கலிங்கக்கடவுளே மீனாக்ஷிபாகா துல

அநுபல்லவி.

தொண்டருமண்டரு வந்துதுதித்திடும் த்வா
துறக்கவும் பிறக்கவும் மிறக்கவுங்கதிதரும் த்வா
ஜோதியுற்ற வீதிசுற்ற ஓதிமற்ற நீதிகற்ற த்வா

சரணம்.

அலங்காரத்து டனேகூத்தாடி
அடியார்க்கருள் செய்வாய் நாடி
நலங்காணப்பெற வேமுன்னாடி
நம்பும்பாஸ்கர னின்பதப்பாடி
நாளுங்கும்பிட்டேன் கொண்டாடி நன்மைபெறவே
நாளுங்கும்பிட்டேன் கொண்டாடி துல

கோலாகலக்குமரா என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி

வேலாயுதக் குமரா வேலாயுதா
சீலாவள்ளிமகிழும் லோலாஜெகம்புகழும்
சேவைத்தந்திட வேணுமுந்தனை
யேவணங்கினேன் பூவடிதந்தருள் வே

தொகையறு.

தேவாதிதேவனே திருச்செந்தூர் வாசனே
திருப்பரங் குன்றூரனே
தேனூர்கடம்பனே திருகார்த்திகேயனே
தேசிகாமயில் வீரனே.

பாட்டு.

பழனிசாமிக்குருவே பாலன்சந்தத்தருவே
பாடித்தொழுதேன் பக்தனெனக்கினி
நாடித்தருவாய் நற்கதியித்தருதி வே

சிங்காரக்கண்மணியே என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. சீராருந்தென்பழனி சிங்காரப்பூம்பழனி
யூராமயூரவாகனு எனக்கருள்செய் யூரா
2. எண்டோளர்தன்மகனே தண்டாயுதக்குகனே
வண்டாகநிற்பதேனையா புகழ்பழனி வண்
3. கண்ணுனக்குத்தானில்லையோகந்தாயிதுந்தொல்லையோ
பண்ணுலகுவாழ்வைவேண்டேனே வரந்தந்தாளும் ம
4. சாரசங்கீதமுத்து சாமிக்குகந்தகவித்து
நாராயணசாமிநற்பதம் நமக்கேசதம் நா

எஸ். ஆர். கமலம் பாடிவரும்

கமலாக்ஷி என்ற வர்ணமெட்டு.

இராகம்-ஹிந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வனஜாக்ஷி பகவதி குணநிதி வன

அநுபல்லவி.

ஸ்ரீவரதமரகத வள்ளிகௌரதி

சரணங்கள்.

1. தினகரக்ரணமதி வதனப்பிரகாசி
திருவுளாகசிய சுழிமுனைவாசி
கனவென்றெழுதிய அமுர்தப்பிரவாசி
கடவுள்மாரி கடவுள்தேரி
ககனமாரி கமழ்கஸ்தூரி வன

2. கோட்டிச்சிறச்சிறக்க வஜ்ஜிரகண்டம்ஜொலிக்க
கோமாளிதெப்பக்குட்டி உத்ரகண்டம்பலிக்க
கேட்டுத்தருகும்ஸ்ரீ கிருஷ்ணன்தங்கையிருக்க
கவனமாக்ஷி கிருபைசாக்ஷி
ககனமாக்ஷி கனமீனாக்ஷி வன

3. கோவைக்கனியைத்தரும் மலைநாட்டுக்குறத்தி
குளந்தைகுகன்கணேசன் தன்னைபெற்றசமர்த்தி
கோவலன்சிலம்புக்காக கன்னகிபாசத்தி
குடக்குண்டாங்கி குமரப்பாங்கி
குடலைவாங்கி நடனமோங்கி வன

4. ஸ்ரீமதுமாம்பழ திடக்கவிச்சிங்கம்
ஜெயக்கொடிவேல்சாமி போற்றும்பிரசங்கம்
கோமாளியீஸ்வரன் கோரிக்கையாய்விளங்கும்
குமரவேணி கூர்பவாணி
சுபக்கல்யாணி மதுரைராணி வன

சுப்ரமணியர் வளையற்சிந்து.

1. அதோபோராண்டி பழனி ஆறுமுகந்தாண்டி
அவனாலே நமக்கென்னசுகம் போனால்போராண்டி
கந்தவேலன் தானாய் வாராண்டி அ

2. தினபுனத்தைகார்த்திருந்த வள்ளியைசிறையெடுக்க
வள்ளியுடன் தினைபுனத்தில் வாதாடினாண்டி
கந்தவேலன் வாதாடினாண்டி அ

3. வேட்டைக்கிடா ஒன்றுவேண்டி
வில்லுடன் அம்பை தொடுத்துக்கொண்டாண்டி
ஓட்டைவுடலை உடுத்திக்கொண்டாண்டி

4. வள்ளிதெய்வானையை கூட்டிக்கொண்டாண்டி
நெற்றிலேமூன்று நாமமிட்டாராம் முருகன்
நேர்த்தியானகப்பளியை தோளிலிட்டாராம் முருகன் அ

5. ஒணான்கொடிபிடுங்கி ஒன்றுரெண்டாய்வளையற்செய்து
வளையற்காரசெட்டியைப்போல் வனத்தில்வந்தாண்டி
கந்தன் தினை வனத்தில்வந்தாண்டி அ

6. ரத்தினவளையல்வள்ளி முத்துவளையல்
பணத்துக்குபத்து நல்ல பச்சைவளையல் அ

7. நீலவளையல்வள்ளி நேர்த்தியானவளையல்
பணத்துக்குபத்துநல்ல பச்சைவளையல் அ

8. வளையற்காரசெட்டியைப்போல் வனத்தில்வந்தாண்டி
அப்போவள்ளியம்மன்கையைதொட்டு வளையலிட்டாண்டி
கந்தவேலன் வளையலிட்டாண்டி அ

9. வேடரேழுபேரும்வரவே வேங்கை மரமாகி அன்று
வேங்கைமரமாயிருந்து வெளியில்வந்தாண்டி அ

10. வெள்ளையானைருபங்கொண்டு விரைவாய்ஓடிவந்து
வள்ளியைமிரட்டி அப்போ வாதாடினாண்டி
கந்தவேலன் வாதாடினாண்டி அ

பல்லவி.

பாவட்டஞ்சோலையிலே நீலமயில் வாய்விட்டுகூவுதுபார்
அதைவந்துபாருங்காணும் திருத்தணிமலையில்வேலவனே
அதோகூவுதுபார் குயிலு அதோகூவுதுபார் முருகா
எட்டடிகுச்சிகுள்ளோ முருகையா எத்தனைநாளிருப்பேன்
ஒருமச்சுகட்டித்தாரும் திருத்தணி மலையில்வேலவனே
கல்லுமலைமேலே கௌதாரி மெல்லமேயுதங்கே
அதைப்பிடித்துதாருங்காணு திருத்தணிமலையில்வேலவனே
நேற்றுகொடுத்தபணம்கந்தையா நெல்லுக்கும்செல்லவில்லை
அதைமாத்தித்தாருங்காணும்திருத்தணி மலையில்வேலவனே

முற்றிற்று.

சென்னை திருவொற்றியூர் கலைமகள் விலாச அச்சுக்கூடம்

புஸ்தக விளம்பரம்.

ஹிப்னாடிஸ மெஸ்மெரிசமெனும் (வாயுவேக)

மனோவசிய சாஸ்திரம்.

மனதை அடக்குவது யோக சித்தி அடைவது நம் இஷ்டம் போல் நடத்துவது ஞான மார்க்கம் கொள்வது வெளி நாட்டில நடப்பதை இந்நாட்டில் தெரிந்து கொள்வது.

இதை வாசித்து வந்தால் இறந்த கால் நிகழ் காலங்களில் நடக்கும் ஒவ்வொரு விஷயமும் அறிந்துக் கொள்ளவும் நமது முன்னோர்களுடன் பேசவும் பிறர் கண் களுக்கு தோற்றப் படாமல் மறைந்துக் கொள்ளவும், நித்திரை வருவித்தல் நோய்களை நீக்கும் வகை ஞாந திருஷ்டி நோக்கம் ஜீவமின்சார விளக்கம் விரலைக் காட்டி தூங்கவைத்தல் தூக்கத்தில் நடக்கும் விநோதக் காக்ஷி இப்னாடிஸ வைத்தியம், கில் வாய்வு சிகிச்சை அபினி பழக்கத்தை நிறுத்தல் காந்தவைத்தியம் பிராணாயாமம் அப்பியாசம் நீட்டிய கையை முடக்காமல் முடக்கிய கையை நீட்டாமல்படி மிருகாதி வசியம் அனேகரை ஒரே முறையில் தூங்க வைப்பது தூக்கத்தி னின்றும் எழுப்பும் வகைகள் தீக்குழி பாய்தல் பாட்டுக் கச்சேரி தாரத்தி விருப்பவர்களை வசியஞ் செய்வது ஆஞ்சநேயர் வசியமும் மூல மந்திரம் உபாசனை தரிசனையும் ஆத்ம யோக மனோவசியம் ஏகாந்த நிலை கர்மாதி துற் குணங்களை போக்கல் பொது ஜன வசிய முறை மானிட வசியம் யோகி களின் திட சித்தி முறை வசிய திருஷ்டி பல வகைகள் ஜெயம் பெருவதற்கான முக்கிய நாமகள் வசியத்தற்கு இணங்கா திருக்கு முறை இன்னு மிதைப்போன்ற அனேக அதியற்புத விஷயங்கள் சேர்ந்து ள்ளதும் பாமரர் முதல் படித்த மேதாவிகள் வரையில் வாசித்து தெரிந்து கொள்ள சுலபமான எளிய செந்தமிழ் நடையில் மணி மந்திராயுத வைத்திய சாலைத் தலைவரும், பூலோக வர்த்தமானி எடிடரும் அனேக நூல் கிரந்த காத்தருங்க கோள கிரந்தகணித சாஸ்திரரும், இயந்திர கடித பரிசோதகரும் சென்னைவாசியும் மெஸ்மெரிஸ இப்னாடிஸ பாரக்கிரமசாலியும் சதாவ தானம் செழுமணவை சித்திரக்கவி தேவேந்திர நாத பண்டிதரவர்களால் இயற்றப்பட்டதும் சுமார் 121 மர்மவிஷயங்களடங்கியதும் யாவத்திரா ளிடத்தும் இருக்கவேண் டியதுமான வழகிய சித்திர விநோதப் படங்களுடன் 1-க்கு விலை ரூபா 1 8 0

எமது விலாசம்:—

டி. ஆர். கிருஷ்ண அண்டு கோ

திருவொற்றியூர் போஸ்டு, மதராஸ்.

ஜப்பான் பட்டு குட்டைகள்

மிகவும் கீர்த்தியான பளபளப்போடும் கூடிய பட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளவும், துப்பட்டாக்களாகவும், ஸ்ரீகள் மேலாக்காகவும், சிறுபெண்கள் தாவணியாகவும் உபயோகிக்கலாம். இதில் பச்சை, வெள்ளை, சிகப்பு, வெண்சிகப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேக வர்ண, முதலிய பலரகங்கள் உண்டு. விலை ரூபா 3 0 0

கிருஷ்ணா, கூந்தல் வளரும் தைலம்.

அநேகநற்சாட்சிபத்ரங்கள் பெற்றது

இத்தைலம் சிறந்த வன மூலிகைகளினால் சாஸ்திர முறைப்படி தயார்செய்யப்பட்டது. சிறந்த வாசனையும் கூந்தலையும் நீளமாக வளரச் செய்யும் அபார சக்தியும் இதற்குண்டு. சகல விதசிரரோகங்களையும் கண்களில் நீர் வடிதல் மயக்கம் கண்ணெரிச்சல் முதலிய வியாதிகளையும் அடியோடு நீக்குவதன்றி சரீரத்திற்கு ஆரோக்கியத்தையுங் கொடுக்கும்.

டின் 1-க்கு விலை ரூபா 1.

மயிர் போக்கும் சோப்

உரோமத்தை நீக்கும் ஓர் சிறந்தவஸ்து இதற்கு கத்தி வேண்டுவதில்லை எந்த இடத்தில் ரோமத்தை நீக்கவேண்டுமோ அந்த இடத்தில் கொஞ்சம் ஜலத்தைப் பூசி அதன் மேல் சோப்பைத்தேய்த்து ஐந்து நிமிஷம் பொறுத்து காய்டினுலாவது ஓலைத்துண்டினாலாவது வழித்துவிட்டால் ரோமம்யாவும் நீங்கி மழமழப்பாகும்.

சோப் 1-க்கு விலை அணா 6
3-சோப்சேர்ந்தபெட்டி ரூபா 1

நரைமயிர் கருக்குந் தைலம்

இத்தைலத்தை நரைத்த மயிருக்குபூசிய 5-நிமிஷங்களுக்கெல்லாம் கருமைநிறைத்தையும் பளபளப்பையும் உண்டாக்கும். மயிரைச் செம்பட்டையகாவும் சாம்பல், நிறமாகவும், மாற்றி விகாரப்படுத்தும், குணம் இத்தைலத்தில் கிடையாது. வயோதிகரை வாலிபரைப்போல் தோற்றுவிக்கும் உபயோகிக்கும் விதம் பார்சலுடன் அனுப்பப்படும்.

1-க்கு ரூபா 1—0—0

சர்வ தேள் விஷ நிவாரண சஞ்சீவி

ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய முதன்மையான ஔஷதம் தேள் கட்டு வாக்களி செய்யான் பாம்பு எலி முதலிய விஷங்கள் 2-நிமிஷத்தில் பறக்கும், இது அநுபோகமுள்ள வாசகண்ட மருந்து, உபயோகிக்கும் விதம்மருந்துடன் அனுப்பப்படும், 2-வித மருந்து அணா 8

டி. ஆர். கிருஷ்ண அண்ட் கோ., திருவொற்றியூர் போஸ்ட், மதராஸ்.